ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

**வெளியிடுபவர்** பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

**திகதி** 30.12.2015

## நாணயக் கொள்கை மீளாய்வு - 2015 திசெம்பர்

2015 ஒத்தோபரில் விரிந்த பணத்தின் ($M_2b$) ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியானது முன்னைய மாதத்தில் பதிவு செய்யப்பட்ட 16.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 17.0 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தில் தொடர்ந்தும் விரிவடைந்தமைக்கு, வங்கித் தொழில் துறையினால் தனியார் மற்றும் அரச துறைகள் இரண்டிற்கும் வழங்கப்பட்ட கொடுகடன் விரிவடைந்தமையே தூண்டுதலாக அமைந்தது. மற்றைய உதவு காரணிகளுடன், வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் முன்னைய மாதத்தின் 22.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 26.3 சதவீதத்தினால் அதிகரித்தது. தனியார் துறைக்கான கொடுகடன் பாய்ச்சல்கள் உயர்ந்த வீதத்தில் தொடர்ந்தும் விரிவடைந்தமையினை 2015 நவெம்பருக்கான தற்காலிக தரவுகள் எடுத்துக் காட்டின. அதேவேளை, உள்நாட்டுப் பணச் சந்தையின் மிகையான திரவத்தன்மை தொடர்ந்தும் உயர்வாக விளங்கி நாணய விரிவாக்கத்திற்கு தூண்டுதலாக விளங்கியது.

அதேவேளை, கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினால் (2006/2007=100) அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 2015 ஒத்தோபரில் 1.7 சதவீதத்திலிருந்து 2015 நவெம்பரில், 3.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஆண்டுச் சராசரி அடிப்படையில், 2015 நவெம்பரில் முதன்மைப் பணவீக்கம் முன்னைய மாதத்தின் 0.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 0.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதே போக்கினை ஒத்ததாக, தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கமும் (2013=100) 2015 ஒத்தோபரின் 3.0 சதவீதத்திலிருந்து 2015 நவெம்பரில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 4.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. பொருளாதாரத்தின் கூட்டுக் கேள்வி நிலைமைகள் உறுதியாக இருப்பதனைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட மையப் பணவீக்கவீதம், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முன்னைய மாதத்தின் 4.4 சதவீதத்துடனும் அண்மையில் குறைவடைந்து காணப்பட்ட 2015 பெப்புருவரியின் 0.8 சதவீதநிலையுடனும் ஒப்பிடுகையில் 4.3 சதவீதத்தினைப் பதிவு செய்தது. அதேவேளை தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட மையப்பணவீக்க அளவீடுகளும் பொருளாதாரப் பணவீக்க அழுத்தங்கள் உயர்வடைந்துவருவதனை வலியுறுத்துவதாக இருக்கின்றன.

வெளிநாட்டு வர்த்தகத்தில், 2015 ஒத்தோபரின் இறக்குமதிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும் பார்க்க கூடுதலாக இருந்தமையின் காரணமாக வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், ஐ.அ.டொலர் 791 மில்லியனுக்கு 6.8 சதவீதத்தினால் குறுக்கமடைந்தது. எனினும், ஒன்றுசேர்ந்த அடிப்படையில், ஆண்டின் முதல் பத்து மாதகாலப்பகுதியில் வர்த்தகப்பற்றாக்குறை ஐ.அ.டொலர் 6,936 மில்லியனுக்கு 2.5 சதவீதத்தினால் விரிவடைந்து எண்ணெய்யல்லா இறக்குமதிகளில் தொடர்ச்சியாக ஏற்பட்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. அதேவேளை, 2015இன் முதல் பதினொரு மாதகாலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 18.1 சதவீதத்தினால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்ட வேளையில் தொழிலாளர் பணவலுப்பல்கள் ஆண்டின் முதல் பதினொரு மாதகாலப்பகுதியில் 0.8 சதவீதத்தினால் சிறிதளவினால் அதிகரித்தன. 2015 ஒத்தோபர் இறுதியில் ஐ.அ.டொலர் 6.5 பில்லியனாக விளங்கிய மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2015 நவெம்பர் இறுதியில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 7.3 பில்லியனுக்கு அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டன. உள்நாட்டு மற்றும் உலகளாவிய அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இலங்கை ரூபா 2015இல் இதுவரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக 8.8 சதவீதத்தினால் தேய்வடைந்திருக்கிறது. இவ்வபிவிருத்திகள் காணப்பட்டமைக்கு இடையிலும் கூட, நாணயச்சபையானது நாணயக்கொள்கையினை ஒரளவு இறுக்கமாக்குவதன் மூலம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்ற வெளிநாட்டுத்துறை கொள்கைகளுக்கு மேலும் ஆதரவளிப்பது அவசியமென்ற கருத்தினைக் கொண்டிருக்கிறது.

உள்நாட்டு பணச்சந்தையில் காணப்படும் தற்போதைய மிகையான திரவத்தன்மை நிலமையினை நீண்டகாலப் பகுதிக்கு தொடர்ந்தும் உயர்வாக இருக்க அனுமதிப்பது நாணயக் கூட்டுக்களின் தேவையற்ற விரிவாக்கத்திற்கு வழிவகுத்து, பொருளாதரத்தின் எதிர்கால பணவீக்கத்திற்கு தூண்டுதலளிக்கும். இதுதொடர்பில், நாணயச்சபை, நாணய மற்றும் விலை உறுதிப்பாட்டினைத் தொடர்ந்தும் உறுதிப்படுத்துவதற்கு பணவீக்கத்தின் மீதான கேள்விப்பக்க அழுத்தங்கள் கட்டியெழுப்பப்படுவதனைக் கட்டுப்படுத்துவது பொருத்தமானதாக இருக்குமெனக் கருதுகிறது. இதற்கமைய நாணச்சபை, 2015 திசெம்பர் 30ஆம் நாள் நடைபெற்ற அதன் கூட்டத்தில் வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா வைப்புப் பொறுப்புக்களுக்கும் பிரயோகிக்கத்தக்க நியதிஒதுக்கு விகித்தினை 2016 சனவரி 16ஆம் நாள் தொடங்குகின்ற ஒதுக்கு வாரத்திலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் 1.50 சதவீதப் புள்ளியினால் 7.50 சதவீதத்திற்கு அதிகரிப்பதென தீர்மானித்து. மேலும், நாணயச்சபையானது மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்தினையும் அவற்றின் தற்போதைய மட்டங்களான 6.00 சதவீத்திலும் 7.50 சதவீதத்திலும் பேணுவதெனவும் தீர்மானித்திருக்கிறது.

| **நாணயக் கொள்கைத் தீர்மானம்** | **கொள்கை வீதங்கள் மாற்றமடையவில்லை<br>நியதி ஒதுக்கு விகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளது** |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 6.00% |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் | 7.50% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 7.50% |